[1973 நவம்பர் 20

திரு. என். கே. பழனிசாமி : கடுமையான நோய்களை எல்லாம் கண்டு பிடிக்கும் அளவுக்கு மற்ற நாடுகளைப் போல் நம்முடைய நாட்டிலுள்ள அரசு மருத்துவ மனைகளில் இந்தக் கதிரியக்கத் தனி மங்களை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மற்ற நாடுகளைப் போல என்று சொல்லும்போதே, மற்ற நாடுகளுடைய பொருளாதார நிலைமை என்ன நம்முடைய நாட்டுப் பொருளாதார நிலைமை என்ன என்பதை நினைவில் கொள்ளவேண்டும். திறமையுள்ளவர்கள் நம்மிடம் இருந்தால்கூடப் போதுமான கருவி வசதிகள் நம்மிடத்தில் இல்லை. இது வெளிநாட்டுச் செலாவணி அனுமதியுடனேயே நிறைவேற்றப்பட வேண்டும். அப்படிப்பட்ட நிலையில் தற்போது சென்னை பொது மருத்துவ மனையிலும், ஸ்டான்லி மருத்துவ மனையிலும் இதைப் பயன்படுத்தும் முறை ஓரளவு நடைபெறுகிறது. இங்கும் தொடக்க நிலையில்தான் இருக்கிறோம். எதிர்காலத்தில் அதற்குத் தேவையான வசதிகள் செய்தாகவேண்டும்.

பின்தங்கிய வகுப்பு மாணவர் விடுதிகள்

* 211 வின—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பின்தங்கிய மாணவர் விடுதிகளுக்கு நிரந்தரமாகக் கட்டடம் கட்டித் தரும் திட்டத்தின்கீழ் இந்த நிதி ஆண்டில் திருச்சி மாவட்டத்தில் எத்தனை விடுதிகளுக்குக் கட்டடம் கட்டித்தர உத்தேசிக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : திருச்சி மாவட்டத்தில் பின்தங்கிய மாணவர் விடுதிகளுக்கு நிரந்தரமாகக் கட்டடம் கட்டித் தரும் திட்டத்தின்கீழ் 15 விடுதிகளுக்குக் கட்டடம் கட்டித் தர அரசு உத்தேசித்துள்ளது.

* 212 வின—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரத்தில் பிற்பட்ட மாணவர்களுக்கு தங்கும் விடுதி அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையிலுள்ளதா?

1973 நவம்பர் 20]

மாண்புமிகு திரு என். வி. நடராசன்: இல்லை. ஆனால், மாயூரத்தில் பிற்பட்ட மாணவிகளுக்காக தங்கும் விடுதி ஒன்று இந்த ஆண்டு துவக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: கட்ட உத்தேசிக்கப்பட்ட விடுதிக் கட்டடங்கள் எந்தெந்த இடங்களில் கட்ட திட்டமிடப் பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: கல்லூரி மாணவர் இல்லம், திருச்சி; மாணவர் உணவு இல்லங்கள்—விராலிமலை; குன்னக்குடி, கண்ணனூர், லால்பேட்டை, பஞ்சப்பட்டி, மணப்பாறை, ஜெயங்கொண்டான், பொன்பரப்பி, மருவத்தூர், பெரம்பலூர், திருவெரம்பூர், மேல்மாயனூர், புதுக்கோட்டை, பொன்னமராவதி ஆகிய இடங்களாகும்.

திரு. என். கிட்டப்பா: மாயூரம் நகரத்தில் ஐந்தாறு உயர் நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அங்கு மாணவர்களுக்குத் தங்கும் விடுதி இல்லை. மாணவிகளுக்குத் தங்கும் விடுதி அமைக் கப்பட்டிருப்பதாகக் கூறினார்கள். ஆண்டவனே அர்த்தநாரீ சுவரராக—ஆண் பாதி பெண் பாதி உடம்பாக வைத்துக் கொண் டிருக்கிற நிலையில் மாணவிகளுக்கு விடுதி கட்டிக் கொடுத்திருப் பது போல் மாணவர்களுக்கும் விடுதி அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: நிதிநிலை நமக்கு அனு கூலமாகும் வரையில் இப்போதுள்ள நிலை நீடித்து வரும். நிதி நிலை அனுகூலமானால் மாண்புமிகு உறுப்பினருடைய யோசனையை அரசு பரிசீலனை செய்யும்.

Watershed Management Board

* 213 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the State Government have constituted the Watershed Management Board for the State; and

(*b*) if so, the details thereof?